# 12 ஞானப்பிரகாச முனிவர்

ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலி என்னும் இடத்தில் கி.பி 1625 ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் காராளப்பிள்ளை என்பதாகும். அவர் கல்வியும், பெருஞ் செல்வமும் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். ஞானப்பிரகாசர் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாண இராச்சியமானது போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தது.

போர்த்துக்கேயர் ஆட்சியில், ஒவ்வொரு வீட்டினரும் ஓர் ஒழுங்குமுறைப்படி ஒவ்வொரு பசுவை, பறங்கியரின் உணவுக்காகக் கொடுத்தல் வேண்டும் என்ற சட்டத்தை விதித்திருந்தனர். அப்பொழுது ஞானப்பிரகாசர் இளமைப் பருவத்தை அடைந்திருந்தார். சைவ மரபில் வளர்ந்த அவர் உயிர்களிடத்தில் மிகுந்த இரக்கம் கொண்டவராக விளங்கினார். பசு மாட்டை கொலை செய்யும் கொடுந் தொழிலுக்கு உதவியாக இருக்க, அவரது அருள் நிறைந்த உள்ளம் ஒப்பவில்லை. எனவே, அவரால் போர்த்துகேயரின் சட்டத்திற்கு அடிபணிய முடியவில்லை. தாம் பசு வழங்கும் முறை வந்ததும், இரவோடிரவாக யாழ்ப்பாணத்தை விட்டு, தமிழகம் சென்றார்.



போர்த்துகேய அதிகாரி ஞானபிரகாசரிடம் பசுவை வழங்குமாறு வேண்டுதல்

ஞானப்பிரகாசர் தமிழ் நாட்டைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்தார். வேதாரணியம் என்னும் இடத்தில் தங்கியிருந்து திருத் தொண்டுகள் புரிந்து வந்தார். பின்னர் அங்கிருந்து திருப்புகலூர் சென்று,

அண்ணாசாமி ஆசாரியரிடத்தில் சிவதீட்சை பெற்ற பின்னர், சிதம்பரம் சென்றார். நடராசப் பெருமானிடம் கொண்ட பக்தியால் சிதம்பரத்தை வசிப்பிடமாகக் கொண்டார்.

ஞானப்பிரகாசர் ஒருமுறை தமிழ்நாட்டின் வடக்கே பயணம் செய்து, வங்காளம் என்னும் நாட்டைச் சென்றடைந்தார். அங்கிருந்த காலத்தில் பிராமணத் துறவி ஒருவரிடம் வடமொழியிலுள்ள தருக்கம், மீமாம்சை, வியாகரணம் முதலியவற்றைக் கற்றார். குரு உபதேசம் பெற்றார். குருவின் கட்டளைப்படி திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து விசேட தீட்சை பெற்று, துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.துறவியான காரணத்தால், முனிவர் என்ற சிறப்புப் பெயரால் போற்றப்பட்டார்.

ஞானப்பிரகாச முனிவர், திருவண்ணாமலை ஆதீனத்தில் இருந்தபொழுது, சைவம், சைவசித்தாந்தம், தமிழ்மொழி, வடமொழி என்பவற்றில் நல்ல புலமையும், சிறந்த தேர்ச்சியும் பெற்றதனால் தமிழ்மொழியிலும், வட மொழியிலும் சைவ சித்தாந்த நூல்களை இயற்றும் ஆற்றலைப் பெற்றார்.

சிறிது காலத்தின் பின், ஞானப்பிரகாச முனிவர் திருவண்ணாமலையிலிருந்து சிதம்பரம் திரும்பினார். சிதம்பரத்தில் ஞானப்பிரகாசம் என்னும் குளத்தையும், அதனை அடுத்து மடம் ஒன்றையும் தாபித்தார். அவற்றின் அருகில் ஆச்சிரமம் ஒன்றையும் அமைத்தார். தமது வாழ்வின் இறுதிக் காலத்தில் இறை பணிகளிலும், சமய நூல்களுக்கு உரை எழுதுவதிலும் ஈடுபட்டார். அவர் சிவஞான சித்தியார் சுபக் கத்திற்குத் தமிழில் எழுதிய உரை சிறப்பு வாய்ந்த தொன்றாகும். ஞானப்பிரகாசமுனிவர் வட மொழியில் சித்தாந்த சிகாமணி, பிராமண தீபிகை, பிரசாத தீபிகை முதலான நூல்களளையும் பௌட் கராகம் விருத்தி, சிவஞானபோத விருத்தி முதலிய



ஞானப்பிரகாச முனிவர்

உரை நூல்களையும் எழுதியுள்ளார். ஈழத்திலிருந்து சென்று, தமிழகத்தில் சைவ சித்தாந்த பணிபுரிந்த ஞானப்பிரகாச முனிவர் கி.பி 1658ம் ஆண்டு பங்குனி மாதம் பூச நட்சத்திரத்தில் இறைபதம் அடைந்தார். முப்பத்து மூன்று ஆண்டுகள் உலகிலே வாழ்ந்த அவர், மிகச் சிறிய வயதிலே பெரும் சித்தாந்த சிந்தனையாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

## பயிற்சிகள்

*01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

1. ஞானப்பிரகாச முனிவரிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக.
2. அவர் யாழ்பாணத்தை விட்டு, தமிழகம் சென்றதற்கான காரணம் யாது ?
3. ஞானப்பிரகாச முனிவர் சிதம்பரத்தில் செய்த பணிகள் இரண்டு தருக.
4. ஞானப்பிரகாச முனிவர் சைவத்துக்கு ஆற்றிய பணிகள் இரண்டு தருக.

## செயற்பாடு

★ ஞானப்பிரகாச முனிவர் வரலாற்றைப் படித்த பின்னர், நீங்கள் கற்றுக் கொண்ட முக்கிய விடயங்களை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

★ ஞானப்பிரகாச முனிவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.

★ உயிர்களிடம் கொண்ட இரக்கத்தால், பசுவதைக்கு அஞ்சி, தமிழகம் சென்றார்.

★ அவர் சைவம், சைவ சித்தாந்தம், தமிழ்மொழி, வட மொழி என்பவற்றில் புலமை பெற்றிருந்தார்.

★ ஞானப்பிரகாச முனிவர் சிதம்பரத்தில் குளம், மடம், ஆச்சிரமம், என்பவற்றை தாபித்துப் பணிபுரிந்தார்.

★ சமய நூல்களுக்கு உரை எழுதினார்.

★ ஞானப்பிரகாச முனிவர் சைவசித்தாந்த நூல்களையும் எழுதினார்.